பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 11 திங்கட்கிழமை 28.12.2020 கதிர் 284

## புதுக்குடியிருப்பில் தனிமைப்படுத்தலில் 379 குடும்பங்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.28

புதுக்குடியிருப்பு சந்தைக்கு மரக்கறி கொண்டு வருபவரிற்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடன் தொடர்புபட்டோர் என்ற கணக்கில்

2

# உள்ளக சுயநிர்ணயத்தை மறுத்தால் வெளிப்புற சுயநிர்ணயம் கோரலாம்!

## அதனை நினைவூட்டி தமிழ்க் கூட்டமைப்பு யோசனை புதிய அரசமைப்பு உருவாக்கல் குழுவுக்கு சமர்ப்பிப்பு

கொழும்பு, டிசெம்பர்.28

ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவு படுத்துகிறோம்.

- புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழு வுக்கு கூட்டமைப்பின் யோசனைகளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இன்று அனுப்பி வைத்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் இயங்கும் - இலங்கைத் தமிழசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்(புளொட்) ஆகியவற்றின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் - இந்த கருத்துக்களைத் தாம் முன்வைக் கின்றார் எனத் தெரிவித்து சம்பந்தன் மேற்படி குழுவுக்கு இன்று காலை கூட்டமைப்பின் யோசனைகளை அனுப்பி வைத்தார்.

2

## 'கொரோனா'விலிருந்து 33,221 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 520 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

2

## சடலங்கள் எரிப்புக்கு எதிர்ப்பு யாழில் இன்றும் ஆர்ப்பாட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

கொரோனா வைரஸ் தொற்றால் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் சடலங்கள் எரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2

## 'தம்மிக்க பாணி' அருந்தியவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி

வறக்காப்பொல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 12 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவர்

2

## 9 மாதங்களின் பின் முதல் தடவை 185 சுற்றுலாப் பயணிகள் வருகை

### மத்தள நிலையத்தில் வரவேற்பு



ஒன்பது மாதங்களின் பின் முதல் தடவையாக 185 சுற்றுலாப் பயணிகள் இன்று இலங்கைக்கு வருகை தந்தனர்.

உக்ரைன் நாட்டின் மலிவு விலை விமான சேவை நிறுவனமான 'ஸ்கையப்' நிறுவனத்திற்குச்

2

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

### கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள் ஓரணியில் பங்கேற்பு






(எஸ்.நிதர்ஷன்)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

'அரசியல் கைதிகள் விடுதலைக்கான குரலற்றவர்களின்

2

## சம்பிக்க, பொன்சேகா, ராஜித, வெல்கமவுக்கு சஜித் அணியில் சிரேஷ்ட உப தலைவர் பதவி



6 சிரேஷ்ட உப தலைவர்களையும், 5 உப தலைவர்களையும் நியமிப்பதற்கு ஐக்கிய மக் கள் சக்தி தீர்மானித்துள்ளது. கட்சியின் புதிய யாப்பின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, குமார வெல்கம, தலதா அத்துகோரல மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ரவி சமரவீர, அஜித் பீ பெரேரா,

2

## கொரோனா வைரஸால் இறந்தவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டாம்!

### கொழும்பில் பௌத்த தேரர்கள் போர்க்கொடி; ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் பதற்றம்



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கோரி, பௌத்த அமைப்புகள் கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தின.

தேசிய அமைப்புகளின் ஒன்றியம், புதிய சிங்கள ராவய, சிங்கலே அமைப்பு உட்பட பௌத்த அமைப்புகளின் தேரர்கள் ஒன்றிணைந்து, கொழும்பு காலி முகத்திடல்

2

## சம்பிக்க, பொன்சேகா, ராஜித, வெல்கமவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுஜீவ சேனசிங்க, சந்ராணி பண்டார, ரஞ்சன் அளுவிகார ஆகியோருக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக கபீர் ஹாசீமும், உப செயலாளராக அசோக அபேசிங்கவும் செயற்படவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்புக்கு அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு பண்டாரவளையில் நடைபெற்ற கூட்டத்தின்போது ஒப்புதல் வழங்கியது.

குறித்த யாப்பின் பிரகாரம் புதிய உறுப்பினர்கள் தேர்வு ஜனவரியில் நடைபெறவுள்ளது.

தலைவர் உட்பட நிர்வாகப் பதவிகளுக்கு வருடாந்தம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். செயற்குழுவுக்கு 80 பேரை உள்வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அரசியல் கூட்டணியொன்றை அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைந்த பின்னர் தலைமைத்துவ சபையொன்று உருவாக்கப்படவுள்ளது.

## சடலங்கள் எரிப்புக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “அரசே உமது பலத்தை சிறுபான்மையினர் மீது கட்டவிழ்க்காதே”, “கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம்களின் மத விழுமியங்களில் கைவைக்காதே”, “கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் சடலங்களை நல்லடக்கத்துக்கு அனுமதியளித்திடு”, “இலங்கை அரசே ஜனாஸாக்களை எரிக்காதே, ஜனாஸாக்களில் இனவாதம் வேண்டாம்” - என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘தம்மிக்க பாணி’ .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேகாலை ஆயுர்வேதப் பாணியை அருந்தியவர் எனவும் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார் என ‘திவயின’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொற்றாளர்கள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## 9 மாதங்களின் பின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமான விமானம் இன்று மதியம் 2.40 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

விசேடமாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்த விமானம் மூலம் 185 உக்ரைனிய சுற்றுலாப் பயணிகள் இன்று வந்தடைந்தனர். இவர்கள் இங்கு 10 முதல் 14 நாள்கள் தங்கியிருப்பார்கள் என சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது.

கொவிட் 19 காரணமாக கடந்த மார்ச் நாடு முடக்கப்பட்டதன் பின் இலங்கைக்கு வரும் முதலாவது சுற்றுலாக் குழு இதுவாகும்.

இதன் தொடர்ச்சியாக வரும் வாரங்களில் இதுபோன்ற இன்னும் 13 விமானங்கள் வருகை தர இருக்கின்றன என மத்தள விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையின் வெற்றிக்குப் பின்னர் நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படுமென விமான போக்குவரத்து சேவை பணிப்பாளர் சுமணசேகர தெரிவித்துள்ளார்.

## கொரோனா வைரஸால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பௌத்த தேரர்கள் பொலிஸ் தடுப்புகளை மீறி ஜனாதிபதி செயலகத்தினுள் நுழைய முயற்சித்தபோது, அங்கு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

ஜனாதிபதியிடம் செய்தி மடலொன்றைக் கையளிக்கவே தாம் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்ல முற்பட்டனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, சுகாதார அமைச்சர் அங்கு வந்தார். அவரிடம் மக்களைத் தெளிவூட்டுவதற்கான செய்தி மடல் கையளிக்கப்பட்டது.

நாட்டில் அனைவருக்கும் ஒரு சட்டமே இருக்க வேண்டும் என்றும், கொரோனாத் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

## ‘கொரோனா’விலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 221 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 642 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 191 பேர் உயிரிழந்துள்ளனர்.

## தமிழ் அரசியல் கைதிக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரல்’ அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் இன்று காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்துகொண்டனர்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், அவர்களின் உயிர் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துமாறும், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

## புதுக்குடியிருப்பில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை 379 குடும்பங்களைச் சேர்ந்த 552 பேராக உயர்வடைந்துள்ளது.

புதுக்குடியிருப்பு சந்தைக்கு மரக்கறி வகைகள் எடுத்து வரும் ஒருவருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்ட நிலையில் இன்று காலை இவர்கள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்தப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு உட்பட்ட சந்தை வியாபாரிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தை வியாபாரிகள் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அதே நேரம் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, விசுவமடு சந்தைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

## உள்ளக சுயநிர்ணயத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருபத்தியொரு பக்கங்களைக் கொண்ட இந்த யோசனைத் திட்டத்தில் மேலும் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

* பதின்மூன்றாவது திருத்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அனைத்து யோசனைகளும், இணக்கப்பாடுகளும், வாக்குறுதிகளும் ஒற்றையாட்சியை விடுத்து சமஷ்டிக் கட்டமைப்பிலான ஆட்சி முறையைத்தான் பிரேரித்திருத்தன.

* புதியதொரு அரசமைப்பு வரையப்படுவதாக இருந்தால் அர்த்தமுள்ள விதமாக அரச அதிகாரங்கள் பகிரப்படுவது அதன் மையப் பொருளாக இருக்க வேண்டும்.

* மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாகத் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு - கிழக்கு இருத்தல் வேண்டும்.

* சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றும் அரச கரும மொழியாக வேண்டும்.

* நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக் கூடிய சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவியில் இருப்பார். பிரதமரின் ஆலோசனைப்படி அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பார். அமைச்சர்களின் அமைச்சுக்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் பிரதமரிடம் இருக்க வேண்டும்.

* ஒவ்வொரு பிராந்தியத்துக்கும், பிராந்திய கவுன்ஸிலின் அங்கீகாரத்துக்கு அமைய முதலமைச்சர் வழங்கும் பரிந்துரைப்படி ஆளுநர்களை ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

* பின்வரும் துறைகளின் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்:-

காணி, சட்டமும் ஒழுங்கும், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் கட்டடங்கள், விவசாயமும் விவசாய சேவையும், நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்கு வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீள்குடியமர்வும் புனர்வாழ்வும், உள்ளூராட்சி நிர்வாகம், பிராந்திய பொதுச் சேவைகள் மற்றும் கலாசார விடயங்கள், ஏனைய சமூகப் பொருண்மிய மற்றும் கலாசார விடயங்கள், கூட்டுறவு மற்றும் கூட்டுறவு வங்கிகள், தொழிற்சாலைகள், வரிவிதிப்பு, மத்திய நிதியளிப்பு, சர்வதேச மற்றும் உள்ளூர் கடன்கள், மானியங்கள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள்.

* நீதித்துறையில் அரசமைப்பு நீதிமன்றங்கள் தனியாக இருக்க வேண்டும். பிராந்திய மேல் நீதிமன்றங்களே அடிப்படை உரிமை மீறல் விடயங்களை விசாரிக்கும் நியாயாதிக்கம் கொண்டவையாக இருக்க வேண்டும்.

* பிராந்திய முதலமைச்சரின் இணக்கத்துடன்தான் பிராந்தியங்களில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படலாம். அது பின்னர் பிராந்திய கவுன்ஸிலினால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

* காணி அதிகாரம் பிராந்தியத்துக்குப் பகிரப்பட வேண்டும்.

* சட்டமும் ஒழுங்கும் பிராந்தியங்களுக்குப் பகிரங்கப்பட்டமையால், தேசியப் பொலிஸ் போன்று ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய பொலிஸ் இருத்தல் வேண்டும்.

- இந்த விடயங்கள் அந்த யோசனைத் திட்டத்தில் விரிவாக உள்ளன.

கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளின் சார்பில் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஒப்பமிட்டு இந்த யோசனைத் திட்டத்தை அனுப்பி வைத்துள்ளார். (உ)

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com



## நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஒளிக்கும் நிபுணத்துவம்!

இலங்கைத் தீவில் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான பௌத்த, சிங்களப் பேரினவாதம் எத்தகைய கோர முகத்தில் – முறையில் – கட்டவிழ்கின்றது என்பது கொரோனாத் தொற்றுக்குள்ளான முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களது உடல்கள் வல்வந்தமாக எரிக்கப்படும் முறைமை அம்பலப்படுத்தி நிற்கின்றது.

தொற்றாளரின் மரணம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைக்கு அமையவே இச் சடலங்கள் எரிக்கப்படுகின்றன எனத் தனது பேரினவாத மேலாதிக்க நடவழக்கைக்கு நியாயம் கற்பிக்கின்றது அரசு.

ஆனால், அந்தத் தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர்கள் யார், என்ன அடிப்படையில் அந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதை கோட்டாபயவின் கொடுங்கோல் அரசு வெளியிடுவதாக இல்லை. அவை எல்லாவற்றிலும் ஒளிவு மறைவும், மூடி மறைப்பும்தான் தொடர்ந்து நீடிக்கின்றன.

கொரோனாத் தொற்றாளர்கள் மரணிக்கும் வேளையில், அவர்களின் சடலத்தைக் கையாள்வது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் சில தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. இந்தியா உட்பட நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தும் பல நாடுகளும் கூட இந்த உடலங்களைப் புதைக்க அனுமதிக்கின்றன.

இலங்கையில் மட்டும்தான் இந்தக் கெடுபிடி. பேரினவாத அடக்குமுறை விதிமுறைகள்.

உலக நாடுகளுக்கும் சர்வதேச விதிமுறைகளுக்கும் மாறாக நடைமுறை விதிகளை, நிபுணர்களின் பெயரில் – பரிந்துரையில் – முன்னெடுப்பதாகக் கூறும் கொழும்பு அரசு, அந்த நிபுணர்களின் விவரங்களை வெளியிடப் பின்னடிக்கின்றது. கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் புதைக்கவே கூடாது என்று ஒற்றைக் காலில் நிற்கும் அந்த நிபுணர்களின் – கற்றறிந்தோரின் – விவரத்தை வெளியிட்டால், அவர்கள் தொடர்பில் சர்வதேச மதிப்பு என்னாகும் என்பது அரசுக்கும் அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும்.

பேரினவாத நலனுக்காக மருத்துவக் கருத்தியலையே மாற்றியமைக்கும் நிபுணர்கள், சர்வதேச தரத்தில் – கற்றறிந்தோர் – மத்தியில் மதிப்பிழந்து விடுவர், அவர்களின் உண்மை முகமும், தர நிலையும் பகிரங்கமாகி விடும் என்று கருதியோ என்னவோ அந்த விவரங்களை வெளியிட சுகாதார அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். அந்த நிபுணர்கள் விவரம் பற்றிய விடயத்தில் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றார்கள்.

அவர்களில் இருவர் பற்றிய விவரங்களே அம்பலமாகியுள்ளன. ஒருவர் – சன்ன பெரேரா. மற்றையவர் – மெதிக்கா விதனகே. அவர்கள் இருவருமே வைரஸ் தொடர்பான நிபுணர்கள் அல்லர். தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி இதனை அப்பட்டமாக அம்பலப்படுத்தியுள்ளார்.

நாட்டில் வைரஸியல் நிபுணர்கள் பலர் இருக்கின்றனர். இந்த அரசாங்கத்தில் இருக்கும் கம்யூனிட் கட்சியைச் சேர்ந்தவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி. கூட வைரஸ் மற்றும் நுண்ணுயிரியல் நிபுணர்தான். ஆனால் அத்தகையோரின் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறாமல், பேரினவாத மேலாதிக்கத்தைப் பலவந்தமாகத் திணிக்கும் முடிவுகளை அறிவிக்கக் கூடிய மருத்துவர்களையே கோட்டாபய அரசு நிபுணர் குழுவாகக் காட்டி நாடகமாடுகின்றது.

“கொவிட்டினால் மரணிப்பவர்களை எரிப்பது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் நாட்டில் இருக்கும் வைரஸியல் தொடர்பான பதினைந்து நிபுணர்களை அழைத்து இது தொடர்பாக அறிக்கை ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டிருந்தார். அந்த அறிக்கை தற்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிபுணர்களின் அறிக்கை பிரகாரம் ஜனாதிபதி விரைவாக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்” என்று அஸாத் ஸாலி சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான விடயங்களில் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள் பலரை சர்வதேச சமூகம் அடையாளம் கண்டிருக்கின்றது. அத்தகையோருக்கு மேற்குலம் விசா வழங்குவதில்லை. தற்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்ததும் இத்தகைய மனித உரிமை மீறலுக்காகவே.

அதுபோல, முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்களை எரிக்க வேண்டும் என்ற நிபுணத்துவப் பரிந்துரையில் ‘நிபுணத்துவத் தன்மை’ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதில் வெறுமனே பேரினவாத வெறி மட்டுமே சம்பந்தப்பட்டிருக்குமானால், அந்தப் பரிந்துரைக்குக் காரணமாக ‘நிபுணர்களின்’ சின்னத்தனம் உலகின் முன்னால் அம்பலப்படுத்தப்பட்டு, அந்தக் கீழ் நிலைமை பெறுபேறுப் பத்திரமாக உலகின் முன்னால் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

அப்போது நிபுணர்கள் என்ற பெயரில் கேடுகெட்டதனம் புரிவோர் உலகின் முன் சரியாகத் தண்டிக்கப்படும் சூழல் ஏற்படும்.

# 994 ஆக எகிறியது கிழக்கு தொற்றாளர்!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 994 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அழகையா லதாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

பேலியகொட மீன்சந்தை கொத்தணியின் பின்னர் ஞாயிறு காலைவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகளின் பிரகாரம் 994 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

அந்தவகையில் மாவட்டங்கள் வாரியாக பார்க்கின்றபோது திருகோணமலை மாவட்டத்தில் 122 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 131 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 24 பேரும், கல்முனை பிராந்தியத்தில் 717 பேரும் என மொத்தமாக 994 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

கொவிட் தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 528 பேர் குணமடைந்துள்ளார்கள். 485 பேர் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். 5 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. 5 மரணங்களில் 4 மரணங்கள் கல்முனை பிராந்தியத்திலும் ஒரு மரணம் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பகுதியிலும் பதிவாகியுள்ளது.

பேலியகொட மீன்சந்தை கொத்தணியின் பிற்பாடு இதுவரை வைத்தியசாலைகளில் 2 ஆயிரத்து 268 பேர் உள்வாங்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் 1,763 பேர் பூரண குணமடைந்து சென்றுள்ளனர். 11 பேரை நாங்கள் இடமாற்றியுள்ளோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ் காவலிலிருந்த நபர் ஒருவர் உயிரிழப்பு

வெயாங்கொடவில் இன்று காலை பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 37 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 19 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ் அதிகாரிகள் இன்று காலை குறித்த நபரை வெயாங்கொடவில் உள்ள ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட ஒரு மோதல் சம்பவம் காரணமாக அவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சந்தேக நபர் மீது மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், இந்த சம்பவத்தில் காயமடைந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 24 மணி நேரத்தில் 39 பேர் கைதாகினர்

முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் - 19 ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக கடந்த 24 மணிநேரப் பகுதியில் 39 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 1,899 பேர் மொத்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பிரபல சிங்கள பாடகர் மரணம்



இலங்கையின் பிரபல சிங்கள பாடகர் ஷெல்டன் முத்துநாமகே தனது 73 ஆவது வயதில் காலமானார்.

பாடகர் முத்துநாமகே உடல் நலக்குறைவு காரணமாக நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் என அவரது குடும்ப உறுப்பின் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 16 ஊழியருக்குக் கொரோனா!

நுவரெலியா – வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்களில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து, அங்கு தொழில் புரிந்தவர்களிடம் பி.சி.ஆர். மற்றும் என்டிஜன்ட் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் கடந்த 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியாகின. இதில் மேலும் 16 ஊழியர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் இதுவரை 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அம்பகமுவ, கினிகத்தேனை, பலன்தொட, வட்டவளை, டெம்பல்ஸ்டோ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனா மரணம் தொடர்பில் பொய்ப் பிரசாரம் வேண்டாம்!

கொழும்பு, நவ.28

கொரோனா மரணங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

கொரோனா தொற்றால் உயிரிழப்போரின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் சில இணையத்தளங்கள் போலி பிரசாரங்களை மேற்கொள்கின்றன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின் பிரகாரம், கொரோனா தொற்றால் உயிரிழக்கும் அனைவரின் சடலங்களும் தகனம் செய்யப்படுகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அரசியல் இலாபத்துக்காக சுகாதார அமைச்சின் கொள்கைகளைத் திரிபுபடுத்தி போலி செய்திகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதை தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.




சமூக நல அறிவிப்பு



# பதற்றம் அடையாமல் அவசர தொடர்பிலக்கங்களுக்கு உடனே அழையுங்கள்



**நீங்களோ, உங்களுக்குத் தெரிந்த எவரேனும் கொரோனா தொடர்பான பதற்ற நிலையிலோ அல்லது கவலைப்பட்டுக்கொண்டோ இருப்பின், 1999 என்ற இலக்கத்தையோ அல்லது 1919 என்ற இலக்கத்தையோ அழையுங்கள், அல்லது 021 222 3348 என்ற யாழ் போதனா வைத்தியசாலை இலக்கத்துக்கு அழையுங்கள்.**




**தனிமைப்பட்டுவிட்டோம் என்ற உணர்வு உங்களுக்கு இருந்தால்,1919 என்ற இலக்கத்தில் 'கொரோனா வைரஸ் அவசர உதவி இணைப்பினை' (Coronavirus Hotline) அழைத்து உள்ளூர் சேவைகளுடன் உங்களைத் தொடர்புபடுத்தக்கூடிய சுகாதார பரிசோதகர் ஒருவருடன் நீங்கள் தொடர்புகொண்டு உங்கள் அவசர அவசியங்களை உடன் நிவர்த்தி செய்யுங்கள் .**

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**

## விக்கி லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற முதற்தர சாரதி பயிற்சி பாடசாலை



சுன்னாகம் 077 381 0444
268.கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் 076 536 0444
புத்தூர் 077 167 8844
மானிப்பாய் 077 291 8444

பலாலிவீதி,
பரமேஸ்வரா சந்தி
யாழ்ப்பாணம்
(தலைமை காரியாலயம்)
076 776 8444

Hot Line 0778308360

# ட்ரம்ப் கையெழுத்திட மறுக்கின்றமை பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும்!

## ஜோ பைடன் எச்சரிக்கை

கொரோனா நிவாரண சட்டமூலத்தில் ட்ரம்ப் கையெழுத்திட மறுப்பது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா நிவாரணத்துக்காக 900 பில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கீடு செய்ய அந்நாட்டு நாடாளுமன்றம் அண்மையில் ஒப்புதல் வழங்கியிருந்தது.

இதையடுத்து, இது தொடர்பான கொரோனா நிவாரண சட்டமூலம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலம் ரொனால்ட் ட்ரம்ப் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சட்டமூலத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டால் தான் அது சட்டமாக்கப்பட்டு, கொரோனா நிவாரணத்துக்கான நிதி ஒதுக்கப்படும்.

ஆனால், இந்த சட்டமூலத்தில் அமெரிக்கர்களுக்கு குறைவான உதவியே கிடைக்கவிருப்பதாகவும், வெளிநாடுகளே அதிக பலனடைவதாகவும் கூறி சட்டமூலத்திற்கு ஒப்புதல் அளிக்க ட்ரம்ப் மறுத்து வருகிறார்.

மேலும், கொரோனா நிவாரணமாக அமெரிக்கர்களுக்கு தலா 600 டொலர் வழங்கப்படும் என சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை 2 ஆயிரம் டொலராக அதிகரிக்கும்படியும் ட்ரம்ப் அமெரிக்க நாடாளுமன்றத்திடம் வலியுறுத்தியுள்ளார். இதனால், கொரோனா நிவாரண சட்டமூலம் சட்டமாவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், கொரோனா நிவாரண சட்டமூலத்தில் ட்ரம்ப் கையெழுத்திட மறுப்பதற்கு ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சட்டமூலத்தில் ட்ரம்ப் கையெழுத்திடாமல் காலம் தாழ்த்துவது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும். இதன் மூலம் ஒரு கோடி அமெரிக்கர்கள் வேலையின்மை காப்பீடு பலன்களை இழக்க நேரிடும் எனவும் பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கமெரூனில் கோர விபத்து: 37 பேர் பலி; பலர் காயம்!

கமெரூனின் மேற்கு கிராமமான நேமலில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 37 பேர் உயிரிழந்தமையுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

70 ஆசனங்கள் கொண்ட இந்தப் பஸ், மேற்கு நகரமான ஃபோம்பனில் இருந்து தலைநகர் யவுண்டேவுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சென்று கொண்டிருந்தபோது, பாரவூர்தி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த பஸ்ஸில் பயணித்தவர்களில் பெரும்பாலோர் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக பயணித்தவர்கள் என குறிப்பிடப்படுகிறது.

இந்தப் பஸ்ஸில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்துள்ளமையுடன் மீட்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில், பலர் படுகாயமடைந்துள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளமையால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# புதிய வகைக் கொரோனா அச்சம் வெளிநாட்டு வருகைக்குத் தடை!

முன்பை விட அதிக வேகத்தில் பரவும் வகையில் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ள புதிய ரக கொரோனா வைரஸ் தொற்று, தங்கள் நாட்டிலும் பரவுவதைத் தவிர்க்கும் வகையில், அனைத்து வெளிநாட்டுப் பயணிகளின் வருகையையும் ஜப்பான் தடை செய்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய வகை கொரோனா வைரஸ் ஜப்பானில் பரவுவதைத் தவிர்ப்பதற்காக, அனைத்து நாடுகளிலிருந்தும் வெளிநாட்டினர் நாட்டுக்குள் வருவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

திங்கட்கிழமை தொடங்கி வரும் 31ஆம் திகதி வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கொரோனாப் பரவல் ஆபத்து இருப்பதை சுட்டிக்காட்டி, புத்தாண்டு கொண்டாட்டங்களைத் தவிர்க்குமாறு ஜப்பான் மக்களிடம் அந்நாட்டு பிரதமர் யோஷிஹிடே சுகா கோரிக்கை விடுத்திருந்தார்.

எவ்வாறாயினும் புதிய ரக கொரோனா வைரஸ் தொற்றால், 50 நாடுகள் பிரித்தானியாவுடனான விமானப் போக்குவரத்து தடையைத் தொடர்ந்தும் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மர்மநபர் கத்திக்குத்துத் தாக்குதல்: சீனாவில் ஏழு பேர் சாவடைந்தனர்!

சீனாவில் மர்மநபர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் ஏழு பேர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் வடக்கு பகுதியில் லியோனிங் மாகாணத்திலுள்ள கையுவான் நகரில் இந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள பொது குளியலறைக்கு வெளியே கத்தியுடன் வந்த மர்ம நபர் அங்கிருந்தவர்கள் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்த கத்திக்குத்து தாக்குதலால் அதிர்ச்சியடைந்த மக்கள் அனைவரும் தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து வெளியேற முற்பட்டுள்ளனர்.

எனினும் அந்த மர்ம நபர் தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாகத் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபரை கைது செய்தனர்.


எனினும் மர்ம நபர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 7 பேர் பலத்த காயமடைந்த நிலையில், அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில் கத்திக்குத்து தாக்குதல் நடத்தியவரின் பெயர் யாங் என்பதும் அவர் உள்ளூரைச் சேர்ந்தவர் என்பதும் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

# பிரேஸில் துணை ஜனாதிபதிக்கு கொரோனா தொற்று உறுதியானது!

பிரேஸில் துணை ஜனாதிபதி ஹாமில்டன் மவுரோவுக்கு கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அவரது அலுவலகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.



67 வயதான ஹாமில்டன் மவுரோவுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொரோனா உறுதியாகியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அவர் ஜபுரோவில் உள்ள அதிகாரபூர்வ இல்லத்தில் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார் என அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸில் ஜனாதிபதி போல்சனரோ கடந்த ஜூலை மாதம் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு மருத்துவ சிகிச்சையில் குணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

212 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பிரேஸில், தொற்றுகள் அடிப்படையில் அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்குப் பின்னால் மூன்றாவது மோசமான நாடாக உள்ளது.

நாட்டில் கிட்டத்தட்ட 7.5 மில்லியன் மக்கள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் ஒரு லட்சத்து 91 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்த நோயால் இறந்துள்ளனர். 6.6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மீண்டுள்ளனர்.

# சீனத் தடுப்பு மருந்து பயனளிப்பதாக சான்று!

## துருக்கி தெரிவிப்பு

கொரோனா வைரஸுக்கு எதிராக சீனாவின் சினோபார்ம் தடுப்பு மருந்து 91 சதவீதம் பயனளிப்பதாக துருக்கி தெரிவித்துள்ளது.

சீனாவின் கொரோனா தடுப்பு மருந்தான சினோபார்ம் முதற்கட்ட முடிவில் 91 சதவீதம் பயனளிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியையும் அளிக்கிறது என துருக்கி குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் தேசிய மருத்துவ நிறுவனமான சினோபார்ம் தயாரிக்கும் கொரோனா தடுப்பு மருந்துகள் பல்வேறு கட்ட மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பின் தற்போது பயன்பாட்டுக்குத் தயாராகியுள்ளன.

பிரித்தானியாவில் பரவி வரும் உருமாற்றமடைந்த கொரோனா வைரஸ் அச்சத்தால் பல்வேறு ஐரோப்பிய நாடுகளும் பிரித்தானியா உடனான விமானப் போக்குவரத்தை நிறுத்தியுள்ளன.

புதிய வகை கொரோனா வைரஸ், கட்டுப்பாட்டை மீறி இருப்பதால், மக்கள் வீட்டுக்குள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என பிரித்தானிய அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில் சவுதி அரேபியா, துருக்கி, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா, ஹொங் கொங் உட்பட 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரித்தானியா உடனான சர்வதேச விமானப் போக்குவரத்துக்குத் தடை விதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்யாணமாலை**
வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1980.10.06
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரம்
செவ் - 4இல்
பாவம் - 22 3/4
கல்வி - A/L
தொழில் - தோட்டம்
எதிர்பார்ப்பு - சாதாரணபெண்

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1987.09.14
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரோகினி
பாவம் - 33 1/2
சூ/செவ் - 10இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - சூ/செவ். அரசதொழில்,
எதிர்பார்ப்புகள் உண்டு.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவுக்
**கவிதைப் போட்டி**
போட்டி 2 பிரிவுகளாக நடைபெறும்
1. பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 1 முதல் 12 வரை)
"கை கழுவினார்கள்....."
2. பெரியவர்களுக்கானது (வயது எல்லை கிடையாது)
"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."
பரிசுத் தொகை:
பாடசாலை மணவர்களுக்கு: 1ம் பரிசு - 3000/=, 2ம் பரிசு - 2000/=, 3ம் பரிசு - 1000/=
பெரியவர்களுக்கு: 1ம் பரிசு - 5000/=, 2ம் பரிசு - 3000/=, 3ம் பரிசு - 1000/=
- 30 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
- புதுக்கவிதையாக / மரபுக்கவிதையாக இருக்கலாம்
- நிச்சயம் சுயமாக வரைந்த, தனது சொந்த கையெழுத்துடன்
- அனுப்பிவைக்க வேண்டும்.
நோக்கம் : - காலச் சூழ்நிலையில் விடுமுறைப்பொழுதில் மனதை ஒருமுறை மகிழ்விக்க
இறுதித் திகதி: - 31.12.2020
போட்டி முடிவுகள் 14.01.2021 பொங்கல் தினத்தன்று காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்.
உங்கள் ஆக்கங்களை எமக்கு தபால் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்.
ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி
தபால் :- அமரர் பேணாட் நினைவுக் கவிதைப்போட்டி, காலைக்கதிர், இல. 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் :- kalaikkathiradvt@gmail.com

# ரஜினி கட்சி பற்றிய அறிவிப்பு திட்டமிட்டபடி வியாழனன்று!

சென்னை,டிசெ.28

வரும் வியாழக்கிழமை 31 ஆம் திகதி ரஜினிகாந்தின் புதிய கட்சி குறித்த அறிவிப்பு வெளியாவதில் எந்த சந்தேகமும் இல்லை என ரஜினி தரப்பில் இருந்து உறுதி அளிக்கப்பட்டு உள்ளது.

நடிகர் ரஜினிகாந்த் அடுத்த மாதம் கட்சி தொடங்க உள்ளார் எனவும், இதற்கான அறிவிப்பு டிசெம்பர் 31 ஆம் திகதியன்று வெளியிடப்படும் என்றும் கடந்த 3 ஆம் திகதி அறிவித்து இருந்தார். அடுத்த மாதம் முதல் தீவிர அரசியலில் ஈடுபட உள்ளதால், அதற்கு முன்பாக 'அண்ணாத்த' படத்தில் தான் சம்பந்தப்பட்ட காட்சிகளை முழுமையாக படமாக்கி முடித்துவிடும்படி படக்குழுவினரிடம், ரஜினிகாந்த் தெரிவித்து இருந்தார்.

இதையடுத்து கடந்த 14 ஆம் திகதி முதல் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள ராமோஜிராவ் திரைப்பட நகரில் 'அண்ணாத்த' படப்பிடிப்பு தொடங்கி நடந்து வந்தது. இந்த படப்பிடிப்பில் கலந்துகொண்ட 4 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அந்த படக்குழுவில் இருந்த ரஜினிகாந்த் உள்ளிட்டோருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது ரஜினிகாந்துக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்பது – அதாவது 'நெகட்டிவ்' என்பது– தெரியவந்தது. இருந்தபோதிலும் ரஜினிகாந்த் ஐதராபாத்திலேயே தன்னை தனிமைப்படுத்திக்கொண்டார்.

இதற்கிடையே ரஜினிகாந்தின் ரத்த அழுத்தத்தில் மாறுபாடு ஏற்பட்டது. தொடர்ந்து கடந்த 25 ஆம் திகதி ஐதராபாத்தில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



டாக்டர்கள் குழுவினர் ரஜினிகாந்துக்கு தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். இதனால் அவருடைய உடல்நலம் நன்கு தேறியுள்ளது. 3 நாள்கள் சிகிச்சைக்குப் பிறகு ரஜினிகாந்த் ஆஸ்பத்திரியில் இருந்து நேற்று 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் ஐதராபாத்தில் இருந்து தனி விமானம் மூலம் ரஜினிகாந்த் நேற்று மாலை சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் இருந்து கார் மூலம் சென்னை போயஸ் கார்டனில் உள்ள தனது இல்லத்துக்கு மாலை 6.30 மணிக்கு வந்தடைந்தார். ரஜினிகாந்த் உடன் அவருடைய மகள் சவுந்தர்யா காரில் அமர்ந்திருந்தார்.

ரஜினிகாந்த் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ள நிலையில், அடிக்கடி ரத்த அழுத்தத்தை கண்காணித்துக்கொண்டு, ஒரு வார காலத்துக்கு வீட்டில் முழு ஓய்வில் இருக்கவேண்டும். உடல் ரீதியான குறைந்தபட்ச செயல்பாடு இருக்க வேண்டும். மன அழுத்தத்தை தவிர்க்கவேண்டும். இந்த நிபந்தனைகளோடு, கொரோனா தொற்று ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும் எந்த நடவடிக்கையையும் அவர் தவிர்க்கவேண்டும் என்று ரஜினிகாந்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நிறுத்தப்பட்ட அண்ணாத்த பட ஷூட்டிங் மீண்டும் தொடங்குவதில் சிறிது கால தாமதம் ஏற்படும் என்றும், பொங்கல் விடுமுறைக்கு பிறகு ஷூட்டிங் தொடங்க வாய்ப்புகள் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதுபோல் திட்டமிட்டபடி 31 ஆம் திகதி புதிய கட்சியை ரஜினிகாந்த் அறிவிப்பாரா என ரஜினி ரசிகர்கள் இடையே எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

வரும் 31 ஆம் திகதி ரஜினிகாந்தின் புதிய கட்சி குறித்த அறிவிப்பு வெளியாவதில் எந்த சந்தேகமும் இல்லை என ரஜினி தரப்பில் இருந்து உறுதி அளிக்கப்பட்டு உள்ளது.

திட்டமிட்டபடி டிசெம்பர் 31 ஆம் திகதி கட்சி தொடர்பான அறிவிப்பை ரஜினிகாந்தே வெளியிடுவார் எனவும், கட்சியின் பெயர், சின்னம், கொடி குறித்த தகவலை டுவிட்டர் மூலம் வெளியிடுவார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில் நடிகர் ரஜினிகாந்தை போயஸ் கார்டன் இல்லத்தில் தமிழருவி மணியன், அர்ஜுன மூர்த்தி ஆகியோர் சந்தித்து பேசினர்.

உடல்நலம் குறித்து இருவரும் விசாரித்தனர். இதனை அடுத்து நிருபர்களிடம் தமிழருவி மணியன் பேசியதாவது:–

திட்டமிட்டபடி வரும் 31 ஆம் திகதி கட்சி தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும். கட்சியின் பெயர், சின்னம், கொடி குறித்த அறிவிப்பை டுவிட்டர் வாயிலாக வெளியிட உள்ளார் எனத் தகவல் தெரிவித்துள்ளார். ரஜினிகாந்தே கட்சி தொடர்பான அறிவிப்பை வெளியிடுவார் எனவும் தெரிவித்தார்.

# இந்தியாவிலேயே இளம் வயதில் கவுன்ஸிலராகி யுவதி சாதனை!

## 21 வயதில் பஞ்சாயத்து தலைவராகிறார் ரேஷ்மா!

கேரள மாநிலத்தில் சமீபத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. உள்ளாட்சி தேர்தலில் ஆளும் மார்க்சிஸ்ட் கட்சி அபார வெற்றி பெற்றது. இந்த முறை கேரள உள்ளாட்சி தேர்தலில் ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்களும் வெற்றி பெற்று அசத்தியுள்ளனர். சமீபத்தில், திருவனந்தபுரம் மேயராக 21 வயது ஆர்யா ராஜேந்திரன் என்ற இளைஞர் அறிவிக்கப்பட்டு, நாட்டு மக்களின் கவனத்தைப் பெற்றார். அந்த வகையில், நாட்டிலேயே இளம் பஞ்சாயத்து தலைவராக மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த ரேஷ்மா மரியம் ராய் தேர்வு செய்யப்படவுள்ளார்.

பத்தனம்திட்டா மாவட்டத்தில் அருவப்பள்ளம் என்ற கிராம பஞ்சாயத்து உள்ளது. உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட 21வயது எட்டியிருக்க வேண்டும். கேரள உள்ளாட்சி தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்ய நவம்பர் 19 ஆம் திகதி கடைசி நாள். அதற்கு ஒரு நாள் முன்னதாக அதாவது நவம்பர் 18 ஆம் திகதி தான் மார்க்சிஸ்ட் கட்சி சார்பாக ரேஷ்மாவுக்கு 21வயது பிறந்தது. தன் பிறந்த நாளுக்கு அடுத்த நாளே ரேஷ்மா அருவப்பள்ளம் பஞ்சாயத்தில் போட்டியிட வேட்பு மனு தாக்கலும் செய்தார். கேரள உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்ட மிக இள வயது வேட்பாளர் ரேஷ்மா மரியம் தான் என்ற பெயரையும் பெற்றார். அருவப்பள்ளம் பஞ்சாயத்தில் 11ஆவது வார்டில் ரேஷ்மா போட்டியிட அவரை எதிர்த்து காங்கிரஸ் கட்சி சார்பில் சுஜாதா மோகன் என்பவர் நிறுத்தப்பட்டார். இதில், சுஜாதா மோகனை விட 70 வாக்குகள் அதிகம் பெற்று ரேஷ்மா வெற்றி பெற்றார். நாட்டிலேயே இள வயதில் கவுன்ஸிலரானவர் என்ற பெருமையும் ரேஷ்மாவுக்கு கிடைத்தது.

அருவப்பள்ளம் பஞ்சாயத்தில் தேர்வு செய்யப்பட்ட 15 பஞ்சாயத்து உறுப்பினர்களில் 9 பேர் சி.பி.எம். கட்சியை



சேர்ந்தவர்கள். இதனால், பஞ்சாயத்து தலைவராக சி.பி.எம். கட்சியை சேர்ந்தவர் தேர்வு செய்வது உறுதியாகியுள்ளது. இந்தமுறை அருவப்பள்ளம் பஞ்சாயத்து பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது, சி.பி.எம். கட்சி சார்பாக அருவப்பள்ளம் பஞ்சாயத்தில் 5 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களில் இளையவர் ரேஷ்மாதான். இதனால், திருவனந்தபுரம் மேயராக ஆர்யாவை அறிவித்தது போல, அருவப்பள்ளம் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு ரேஷ்மாவை மார்க்சிஸ்ட் தேர்வு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. எனினும், கொன்னி பகுதி மார்க்சிஸ்ட் கட்சி செயலாளர் ஷியாம்லால் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். ரேஷ்மாவின் லீடர்ஷிப் திறனுக்காக அவரை பஞ்சாயத்து தலைவராக தேர்வு செய்துள்ளதாகவும் விரைவில், இது குறித்த தகவல் அவருக்கு தெரிவிக்கப்படும் என்று ஷியாம்லால் தெரிவித்துள்ளார்.

கொன்னியில் உள்ள வி.என்.எஸ். கல்லூரியில் பி.பி.ஏ படித்துள்ள ரேஷ்மாவின் குடும்பத்தினர் காங்கிரஸ் கட்சியின் பின்னணி கொண்டவர்கள். ரேஷ்மாவின் தந்தை ராய் பி.மேத்யூ மர வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார். தாயார் மினிராய் கல்லூரி பேராசிரியை ஆவார். ஆனால், கம்யூனிசத்தின் கொண்ட பிடிப்பால் ரேஷ்மா, பள்ளி பருவத்திலிருந்து மார்க்சிஸ்ட் கட்சியில் ஈடுபாடு காட்டி வந்தார் ரேஷ்மா.

# வாகனங்களுடன் எரிந்த கெண்டெய்னர் லொறி!

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் பைசாபாத் சாலையில் பாபு பனராசி தாஸ் பல்கலைக்கழகம் எதிரே சாலையில் சரக்கு லொறி ஒன்று தீப்பிடித்து எரிந்தது.

அந்த லொறியில் இருசக்கர வாகனங்கள், கார்கள் போன்றவை கொண்டு செல்லப்பட்ட நிலையில் லொறி முழுவதும் பயங்கரமாகத் தீ பரவியது.

இந்தத் தீவிபத்தில் லொறியில் இருந்த வாகனங்கள் எரிந்து கருகின. தீயணைப்பு வீரர்கள் கடும் போராட்டத்திற்குப் பிறகு தீயை அணைத்தனர்.



# இமாச்சலப் பிரதேசத்தில் மிகக் கடும் பனிப்பொழிவு

இமாச்சலப்பிரதேசத்தில் கடுங்குளிரால் உறைபனி பொழிவதால் தரை முழுவதும் பனிமூடி வெண்மையாகக் காட்சியளிக்கிறது.

நாட்டின் வட மாநிலங்களில் குளிர் காலம் தொடங்கியுள்ள நிலையில், இமயமலைப் பகுதிகளில் உறைநிலைக்கும் கீழாகக் கடுங்குளிர் நிலவுகிறது.

இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவில் கடும் பனிப்பொழிவால் தரையெங்கும் பனிப்படலம் போர்த்தி வெண்மையாகக் காட்சியளிக்கிறது.

வீட்டின் கூரை, கார் ஆகியவற்றின் மீதும் பனி உறைந்து மூடியுள்ளதால் வெண்மையாகக் காட்சியளிக்கின்றன. பொதுமக்கள் பனிக் கட்டியை அள்ளி ஒருவர் மீது ஒருவர் வீசி விளையாடி மகிழ்ந்தனர்.





# சீனாவில் இருந்து இந்தியாவுக்கு வருவோருக்கு அனுமதி இல்லை

## விமான நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவு

சீனாவில் இருந்து வருவோருக்கு விமானத்தில் அனுமதியளிக்க வேண்டாம் என்று மத்திய அரசு விமான நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

சீனாவில் இருந்து இந்தியா வரும் விமானங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் வர்த்தக ரீதியாக சீனர்கள் இந்தியாவுக்கு வர மூன்றாம் உலக நாடுகள் வழியாக விமானப் போக்குவரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

வந்தே பாரதம் மற்றும் பபிள் விமான சேவைகளை இந்தியா வெளிநாடுகளுக்கு அனுமதித்துள்ள நிலையில் சீனாவில் இருந்து இதர நாடுகள் வழியாக இந்தியாவுக்கு ஏராளமான சீனர்கள் வருகின்றனர்.

இதே போன்று இங்கிருந்தும் பலர் சீனாவுக்கு சென்று வருகின்றனர். இந்நிலையில் சீனாவில் இருந்து இந்தியாவுக்கு யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்று மத்திய அரசு விமான நிறுவனங்களுக்கு உத்தரவிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.




# காட்டு யானைகளினால் பாதிப்புகள் தவிர்க்க தேசிய தொடர்பாடல் குழு



காட்டு யானைகளால் பொதுமக்களுக்கு ஏற்படும்பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு தேசிய தொடர்பாடல் குழுவொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

2016 ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 211 கிலோ மீற்றர் யானை வேலி அமைக்கப்பட்டிருந்தும் அவை உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை. இதனால் குறுகிய காலத்தில் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றன.

யானை வேலிகளைப் பராமரிப்பதற்காக வருடம் ஒன்றுக்கு 8 கோடியே 60 லட்சம் ரூபா செலவிடப்படுகின்றன. இருப்பினும் அதற்கும் பல சவால்கள் தோற்றம் பெறுகின்றன. இதன் காரணமாகவே யானை – மனித மோதலை கட்டுப்படுத்த தேசிய தொடர்பாடல் குழுவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தரப்படுத்தலுக்கு அமைய யானை – மனித மோதலில் இந்தியா முதலாம் இடத்திலும், இலங்கை இரண்டாம் இடத்திலும் உள்ளது. யானை மனித மோதலில்ஏற்படும் நடுத்தர விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வனஜீவராசிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வனப்பகுதிகளை அண்மித்த அபிவிருத்தி நிர்மாணப் பணிகளைநிர்மாணிக்கபுதியகொள்கை வகுக்கப்படும்.

அத்துடன் வனப்பகுதிகளை மீளுருவாக்கம் செய்யும் செயற்திட்டங்கள் நாடளாவிய மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. – என்றார்.

# பொலிஸார் சூடு யானை சாவு!

கஹட்டகஸ்திஹிலிய பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திஹிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை காட்டுயானை ஒன்று அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த வீடுகளையும், பயிர்செய்கையையும் சேதப்படுத்துவதாக பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு முறைப்பாடளித்துள்ளனர்.

இதன்போது அங்கு வந்துள்ள பொலிஸார் யானையை விரட்டும் நோக்கத்தில் வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.



இதனைத் தொடர்ந்து பதற்றமடைந்த யானை பொலிஸாரை தாக்க முற்பட்டுள்ளதன், பின்னரே பொலிஸார் யானை மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், கஹட்டகஸ்திஹிலிய பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நிபுணர்களின் அறிக்கை பிரகாரம் ஜனாஸா எரிப்புக்கு ஜனாதிபதி முடிவு தீர்மானம் அசாத் சாலி வலியுறுத்து



நாட்டில் கொவிட்டில் மரணித்தவர்களில் 120 இற்கும் அதிகமானவர்கள் முஸ்லிம்கள். மனிதாபிமானம் இல்லாமலே அரசாங்கம் இன்னும் செயற்பட்டு வருகின்றது. சர்வதேச மட்டத்தில் அதற்கான பெறுபேற்றை அரசாங்கம் விரைவில் கண்டுகொள்ளும். அத்துடன் வைரஸியல் நிபுணர்களின் அறிக்கையின் பிரகாரம் ஜனாதிபதி தீர்மானம் எடுக்கவேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை கையாள்வதிலும் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக செல்பவர்களை அனுசரிப்பதிலும் அரசாங்கமும் அரச அதிகாரிகளும் செயற்படும் விதம் மிகவும் கவலையளிக்கின்றது. மனிதாபிமானமே இல்லாத நிலைக்கு நாடு சென்றுகொண்டிருக்கின்றது.

முஸ்லிம் ஒருவர் மரணித்தால் அது கொரோனாவாக மாறும் நிலையே நாட்டில் இடம்பெற்று வருகின்றது. அதனால்தான் நாட்டில் இதுவரை கொரோனாவில் மரணித்தவர்களில் 120 இற்கும் அதிகமானவர்கள் முஸ்லிம்கள்.

மேலும் நாட்டில் வைரஸியல் நிபுணர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டிருக்கும் தொழிநுட்ப குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் எவரும் இலர். இந்த குழுவின் தீர்மானத்தின் பிரகாரமே அரசாங்கம் கொவிட்டில் மரணிப்பவர்களை எரிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றது. இந்த குழுவின் தீர்மானத்தில் விஞ்ஞான ரீதியிலான எந்த தீர்மானமும் இல்லை.

விசேடமாக குறிப்பிட்ட குழுவில் இருக்கும் அங்கத்தவர்களில் இரண்டுபேர் விவரம் தற்போது வெளிப்பட்டிருக்கின்றது. வைத்தியர்களான சன்ன பெரேரா மற்றும் மெத்திகா வித்னகே ஆகிய இருவரும் வைரஸ் தொடர்பான வைத்தியர்கள் அல்லர். தற்போது இவர்களுடன் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்துகொண்டுள்ளார். வைரஸில் மரணிக்கும் சடலங்களை குளிரூட்டிகளில் வைப்பதால் அந்த வைரஸ்கள் மீண்டும் செயற்ட ஆரம்பிக்கும். அதனால் விரைவாக எரிக்கவேண்டும் அல்லது அடக்கம் செய்யவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

கொவிட்டில் மரணித்தவர்களில் அதிகமானவர்களின் சடலங்கள் கடந்த சில நாள்களாக குளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் வைத்தியசாலைகளில் வைரஸ் பரவியதாக யாரும் தெரிவிக்கவில்லை. மஹர சிறைச்சாலை கலவரத்தில் மரணித்தவர்கள் அனைவருக்கும் கொரானோ என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களது சடலங்கள் இன்னும் குளிரூட்டிகளிலே வைக்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குளிரூட்டிகளில் வைக்க முடியும் என்றால் ஏன் மற்ற சடலங்களை வைக்க முடியாது எனக் கேட்கின்றோம்.

மேலும் கொவிட்டில் மரணிப்பவர்களை எரிப்பது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி நாட்டில் இருக்கும் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் 15 பேரை அழைத்து இது தொடர்பாக அறிக்கை ஒன்றை கேட்டிருந்தார். தற்போது அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் நிபுணர்களின் அறிக்கையின் பிரகாரம் ஜனாதிபதி விரைவாக தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். ஜனாஸா எரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து சர்வதேச ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இதனால் நாட்டின் நற்பெயருக்கே களங்கம் ஏற்படப்போகின்றது. அத்துடன் இவ்வாறான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் காரணமக முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதும் குறைவடைந்துவிடும். - என்றார்.

# ஜனவரியில் ஆயிரம் ரூபா வழங்காவிடில் போராட்டம்!

## தாழ்நில தோட்டத்தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை

முதலாளிமார் சம்மேளத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயார். அதனால் ஜனவரியில் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்காவிட்டால் தொழிற்சங்க போராட்டத்துக்குச் செல்வோம் என தாழ்நில தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ருவன் கால்லகே தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக்கு முதலாளிமார் சம்மேளம் விதித்திருக்கும் நிபந்தனை தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஜனவரியில் ஆயிரம் ரூபாவாக வழங்குவதாக வரவு - செலவுத் திட்டத்திலேயே தெரிவிக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவது இது முதல் தடவையாகும்.

இதன்போது எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்காமல் இருப்பதற்கே தோட்ட முதலாளிமார் முயற்சிக்கின்றனர். வரவு - செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்துக்கு யாருக்கும் நிபந்தனை விதிக்க முடியாது. அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா ஜனவரியில் இருந்து வழங்கப்படவேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம்.

அத்துடன் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது முதலாளிமார் சம்மேளனம் இரண்டு நிபந்தனைகளை விதித்திருந்தது.

அதன் பிரகாரம் மேலதிக இரண்டு கிலோ தேயிலை கொழுந்து பறிப்பதற்கு நாங்கள் தயார். ஆனால் உரிய காலாண்டுக்கு தேயிலை தோட்டங்களுக்கு உரம் வழங்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலாகும்.

அதேபோன்று வருடத்துக்கு 180 நாள்கள் கட்டாயம் தொழில் செய்யவேண்டும் என்ற நிபந்தனையையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஏனெனில் தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்தால்தான் அவர்களுக்கு சம்பளம் கிடைக்கும். அவர்கள் ஒவ்வொருநாளும் வேலைக்கு செல்வார்கள். அதனால் முதலாளிமார் சம்மேளனத்தின் இரண்டு நிபந்தனைகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்பதை தொழில் அமைச்சர் மற்றும் பெருந்தோட்ட அமைச்சருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டதாகும். வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படும் ஏனைய முன்மொழிவுகளை நிறைவேற்ற முடியுமாக இருந்தால் ஏன் தோட்டத்தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பளத்தை மாத்திரம் ஜனவரியில் இருந்து அதிகரிக்க முடியாது எனக் கேட்கின்றோம்.

எனவே தோட்ட முதலாளிமார் விதித்திருக்கும் இரண்டு நிபந்தனைகளயும் நாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால், தோட்ட முதலாளிமார்களுடன் இதன் பின்னர் கலந்துரையாடல் தேவையில்லை. அதனால் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டதன் பிரகாரம் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டும். - என்றார்.





# திருமலையில் பெரு மழை பல இடங்கள் வெள்ளத்தில்

திருகோணமலை மாவட்டத்தில் பெய்த. வரும் கனமழை காரணமாக நகரின் பல பகுதிகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது.

குறிப்பாக திருகோணமலை நகரின் மட்கோ, பள்ளத்தோட்டம், உப்புவெளி, 3 ஆம் கட்டை, அலஸ்தோட்டம், துவரங்காடு, கிண்ணியா ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

திருகோணாமலை, நிலாவெளி பிரதான வீதியிலும் வெள்ள நீர் சடுதியாக அதிகரித்ததால் அந்த வீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

பல வீடுகளுக்குள் வெள்ளம் உட்புகுந்ததால், அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையோடு பல வாகனங்கள் சேதமடைந்துள்ளன.





மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2020 இல் வெளியிடப்பெற்றது.